# மின்தூக்கியில் நடந்த
# மறக்க முடியாத சம்பவம்

எல்லா மனிதர்களுக்கும் வாழ்க்கையில் பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும். அவை நல்ல சம்பவங்களாகவும் கெட்ட சம்பவங்களாகவும் அமைந்திருக்கும். அவற்றில் ஒரு சில சம்பவங்களையும் அதனால், கிடைத்த அனுபவங்களையும் மட்டும் யாராலும் மறக்க முடியாது. என் வாழ்விலும் சில சம்பவங்கள் நிகழ்ந்தன. அவற்றில் ஒரே ஒரு சம்பவத்தையும் அதனால் கிடைத்த அனுபவத்தை மட்டும் மறக்க முடியாது. மேலும், அதை என் மனத்திலிருந்து என்றும் அழிக்கமுடியாது. அதைத்தான், நான் இக்கட்டுரையில் எழுதுகிறேன்.

ஜூன் மாத விடுமுறை ஆரம்பித்தது. எனக்கும் என் நண்பர்களுக்கும் ஒரே கொண்டாட்டம். நாங்கள் வீட்டில் இருப்பதே அரிது. நானும் என் நண்பர்களும் தினந்தோறும் வெளியே சென்று ஊர் சுற்றியபிறகுதான் வீடு திரும்புவோம். அவ்வாறே அன்றும் நான் என் நண்பர்களுடன் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பினேன். அப்போது, என் அடுக்குமாடிக் கட்டட மின்தூக்கியில் நானும் மற்ற சிலரும் உள்ளே சென்றோம். ஒவ்வொருவரும் அவரவர்களின் மாடி எண்ணின் பொத்தானை அழுத்தினர். மின்தூக்கி என்றும் போல் அன்றும் மேலே சென்று கொண்டுதான் இருந்தது. ஆனால், திடீரென்று மின்தூக்கி ஒரு ஆட்டம் கொடுத்து இயங்காமல் நின்றுவிட்டது. இதற்குக் காரணம் மின்சாரக் கோளாறு என்று தெரிய வந்தது.

மின் தூக்கியின் ஆட்டத்தினால், அதிர்ச்சியுற்ற ஒரு பெண்மணி மயக்கம் போட்டுக் கீழே விழுந்துவிட்டார். இதைக் கண்ட நானும் இன்னொரு ஆடவரும் பேய் அறைந்தது போல் சிலையாய் நின்றோம். என்ன செய்வது என்று தெரியாமல் திக்குமுக்காடி நின்றோம். அந்தப் பெண்ணின் முகத்தில் தெளிப்பதற்கு எங்கள் இருவரிடமும் ஒரு தண்ணீர்ப் போத்தல்கூட இல்லை.

இந்த மாதிரியான சம்பவம் இதற்கு முன் எனக்கு நடைபெறாததால் என் மனம் ‘பட் பட்’ என அடித்துக்கொண்டு வெளியே வருவது போல் இருந்தது. நல்ல வேளை! மின்தூக்கியைச் சுற்றும் முற்றும் பார்த்ததால் அங்கு ஓர் எச்சரிக்கை மணி இருப்பதைக் கண்ணுற்றேன். அதை நான் உடனே அழுத்தினேன்.

சில நிமிடங்களில் மின்தூக்கி இயங்க ஆரம்பித்தது. மின் தூக்கியின் கதவு திறக்கும்போது அங்கே மின்தூக்கியைப் பழுதுபார்க்கும் சில ஆட்கள் இருந்தனர். அவர்கள் மயங்கிக் கிடந்த பெண்மணியைக் கண்டு உடனே அவருடைய முகத்தில் தண்ணீரைத் தெளித்தனர்.

அந்தப் பெண்மணி மெதுவாகத் தன் சுயநினைவைப் பெற்றார். அந்த ஆட்கள் அப்பெண்மணிக்குக் குளிர்பானம் வாங்கிக் கொடுத்தனர். அந்தப் பெண்மணி அந்த ஆட்களுக்கு நன்றி கூறினார். நடந்ததை அறிந்த பெண்மணியும் மின்தூக்கியில் இருந்த ஆடவரும் எச்சரிக்கை மணியை அழுத்தியதற்கு என்னிடம் மனதார நன்றி கூறினர்.

பிறருக்கு உதவுவதில் ஏற்படும் மனநிறைவு மாதிரி வேறு எதிலும் கிடைக்குமா? என எண்ணியவாரே நான் பெருமிதத்துடன் வீட்டுக்குச் சென்றேன்.

ஆயிஷா பேகம்

உயர்நிலை 2 உயர்தமிழ்

மெக்பர்சன் உயர்நிலைப்பள்ளி